# வடுக நம்பி
## வாழி திருநாமம்

சித்திரையில் அச்வனியில் சிறப்புடன் பிறந்தான் வாழியே
மிதுன சாலக்கிராம நகரத்தை வாழ்வித்தான் வாழியே
அத்திகிரி அடி பணிந்தவனிடம் காதலுற்றான் வாழியே
ஆசாரியன் அன்றி வேறு தெய்வம் அறியாதவன் வாழியே
முக்தி அடைய ஆசார்யன் பாதமே கதி என்றான் வாழியே
பால் பொங்கிடும் என்று அரங்கனையே வெறுத்தான் வாழியே
எதிராசர் மிகு அருள் பெற்று உணர்ந்தோன் வாழியே
வடுக நம்பி திருவடிகள் ஊழிதோறூழி வாழியே

ஏராரும் சித்திரையில் அசுவதி வந்தான் வாழியே
எழில் சாளக்கிராம நகரத்தில் அவதரித்தான் வாழியே
சரம பர்வ நிஷ்டையில் ஊன்றினான் வாழியே
எம்பெருமானாரே தெய்வம் என்று அநுஷ்டித்தான் வாழியே
அநவரதம் ஆசார்ய கைங்கர்யமே பொழுது போக்கும் என்றான் வாழியே
ஆசாரியனை அல்லாது வேறு தெய்வம் அறியான் வாழியே
ஸ்வாசார்யர் அஷ்டோத்தர சத நாமங்களை அருளினான் வாழியே
ஸ்ரீராமாநுஜர் வைபவமே நிரந்தரம் அநுசந்தித்தான் வாழியே
ஆசார்ய பாத தீர்த்தமே பரம போக்யம் என்று எண்ணினான் வாழியே
ஸ்ரீவடுக நம்பி திருவடிகள் வாழி வாழி வாழியே

---